# ஸ்ரீ உ.வே. குறிச்சி ஸ்வாமிகளை பற்றி ஒரு சிறு குறிப்பு

நமது உபாத்யாயர் ஸ்ரீ குறிச்சி லக்ஷ்மி ந்ருஸிம்மன் ஸ்வாமி அவர்கள் விக்ருதி வருஷம் புரட்டாசி மாஸம் ஸ்வாதி நக்ஷத்திரத்தில். ஸ்ரீ உ.வே. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமிக்கும் திருமதி ஜெயலஷ்மி அம்மையாருக்கும் த்விதீய குமாரனாக பிறந்தார். ஸ்வாமிக்கு தற்போது 63 திருநக்ஷத்ரம் பூர்த்தியாகி 64வது திருநக்ஷத்ரம் நடந்து கொண்டிருக்கிறது.

ஸ்வாமி சிறு வயதில் ஸ்ரீரங்கம் ஆண்கள் மேல்நிலை பள்ளியில் கல்வி பயின்றார். பின்னர் திருச்சி சேஷசாயி இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியில் பொறியியல் படிப்பை முடித்தார்.

ஸ்வாமியின் திருத்தகப்பனார் ஸ்ரீ உ.வே. குறிச்சி திருமலை கிடாம்பி ஆத்ரேய ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி வேத வித்வானாகவும் ஸலக்ஷணகனபாடியாகவும் ஸ்ரீரங்கம் ஸ்ரீஅஹோபில மடம் ஆராதகர் மற்றும் முத்ரகர்த்தாவாகவும் 70 வருஷகாலம் தொண்டாற்றியிருக்கிறார்.

ஸ்வாமியின் திருத்தகப்பனாரே பூர்ணமாக அத்யயனம் செய்தவர். அதனால் ஸ்வாமி அவர் அருகிலிருந்து வேதத்தின் பலபகுதிகளை அத்யயனமும் செய்தவர். நமது ஸ்வாமி சிறு வயதிலேயே மேலப்பாளையம் ஸ்ரீ.உ.வே. வெங்கடாச்சாரியார் ஸ்வாமி மற்றும் ஸ்வாமியின் திருத்தகப்பனார் ஸ்ரீ.உ.வே. குறிச்சி ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமிகளிடமும் உபயோக்த வேதங்களையும் மற்றும் சில வைதீக ப்ரயோகங்களையும் கற்றுக்கொண்டார். பல ஸ்வாமிகளிடம் ஸந்தேகங்களை நிவர்த்தி செய்துகொண்டார்.

ஸ்வாமி 33 வருட காலம் லுகாஸ் டி.வி.ஸ். கம்பெனியில் பணி புரிந்தார். ஸ்வாமி உத்யோகத்திலிருக்கும் போதே பலபேர்களுக்கு உபயோக்த வேதங்களை சொல்லிக்கொடுத்தார். தற்சமயம் சென்னையில் 10 இடங்களில் வேதம் சொல்லிக்கொடுத்து, வித்யார்த்திகளை பல கோயில் வைபவத்துக்கும் மற்றும் பல இடங்களுக்கும் தன்னுடன் அழைத்துச்சென்று வழி முறைகளையும் கற்றுக்கொடுத்து வருகிறார்.

வேதத்தை பரப்புவது ஒன்றையே குறிக்கோளாக் கொண்டு பல இடங்களுக்கு சென்று எந்தவித பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் வேத வகுப்புகளை நடத்திக்கொண்டிருக்கிறார். இதுவரை பலபேர் வேதம் பயின்று சென்றுள்ளனர். தற்சமயம் சுமார் 100 வித்யார்த்திகளுக்கு மேல் கற்றுக்கொண்டிருக்கின்றனர்.

தற்போது வேளச்சேரி தெலுங்கு ப்ராஹ்மண தெரு, வேளச்சேரி தண்டீஸ்வரம் நகர், மடிப்பாக்கம், கிண்டி, அடையார், தி. நகர் (சி.ஐ.டி. நகர்) கோதண்டராமஸ்வாமி கோயில் தெரு, மேற்கு மாம்பலம், வாகீசவாணி, (கோடம்பாக்கம்), ஆதம்பாக்கம் ஆகிய இடங்களில் வகுப்புகள் நடை பெற்று வருகிறது.

த்ரிகால ஸந்த்யாவந்தனம், தர்ப்பண மந்திரங்கள், ச்ரார்த்தப்ரயோக மந்திரங்கள், ஸாளக்ராம திருஆராதனம், அச்சித்ரம், அச்வமேதம், அருணம் (ஸூர்ய நமஸ்காரம்), காடகம், தைத்திரீய உபநிஷத், உதகசாந்தி, கோஷசாந்தி, பஞ்ச ஸூக்தங்கள், ஸ்வஸ்தி வாசனம், வேதப்ரபந்த தொடக்கம் மற்றும் சாத்துமறை, ஸம்பாவனை மற்றும் ஆசீர்வாத பஞ்சாதிகள், ஸ்ரீ ருத்ரம், சமகம், நவக்ரஹ ஸூக்தங்கள், வைதீகக்ரமங்கள் மற்றும் ஸம்ப்ரதாய விஷயங்கள், ஸந்தேகங்கள், என பல வேத விஷயங்களை போதித்துக்கொண்டிருக்கிறார்.

ப்ரதி வாரத்திற்கு ஒவ்வொரு கேந்திரத்திலும் 3 வகுப்புகள் நடைபெறுகிறது. மேலும் ஸ்வாமியின் திருத்தகப்பனார் வெளியிட்டு வந்த புத்தகங்களை (ப்ரயோக), லகுதிரு ஆராதனம், ச்ரார்த்தப்ரயோகம், பூர்வப்ரயோகம், அபரப்ரயோகம், வேதப்ரபந்த தொடக்கம், சாத்துமறை மறுபதிப்பு செய்துகொண்டும், மற்றும் அச்சித்ரம், அச்வமேதம், காடகம் அருணம், தைத்திரீய உபநிஷத், வைதீகப்ரயோகம், மந்தரப்ரயோகம் பாகம் 1, பாகம் 2, ஆகிய புத்தகங்களையும் ஸமஸ்க்ருதம் மற்றும் தமிழிலும் ஸ்வரத்துடன் தொகுத்து வெளியிட்டுக்கொண்டிருக்கிறார். இந்த புத்தகங்கள் அனைத்தும் நம் பாரத தேசமட்டுமில்லாமல், வெளி நாடுகளிலும் அநேகம் பேர் வாங்கி பயன் அடைந்து கொண்டு இருக்கிறார்கள்.

ஒவ்வொரு ஏகாதசியிலும் அச்சித்தரம் மற்றும் அச்வமேதம், த்வாதசியில் தைத்திரீய உபநிஷத் மற்றும் காடகம், ப்ரதோஷகாலத்தில் ஸ்ரீ ருத்ரம் மற்றும் சமகம், ஞாயிற்றுக்கிழமையில் அருணம் (ஸூர்ய நமஸ்காரம்), மற்ற நாட்களில் உதகசாந்தி, ஸூக்தங்கள், ஸ்வஸ்தி வாசனம், நவக்ரஹ ஸூக்தம், வேத ப்ரபந்த சாத்துமறை, ஆசீர்வாத, ஸம்பாவனை பஞ்சாதிகள் பாராயணம் செய்யப்படுகிறது.

அவரது தொண்டு மேலும் மேலும் சிறக்க எல்லாம் வல்ல அந்த ஸ்ரீமந் நாராயணனை ப்ரார்த்திப்போமாக. ஸ்வாமிக்கு எங்களின் உளங்கனிந்த க்ருதக்ஞயை தெரிவித்துக்கொள்கிறோம்.